## முதன்மை மாவட்ட நீதிமன்றம், ஈரோடு

## **OS No**. 329/2020

2024ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24ம் தேதி PW1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி திரு.B.முருகேசன் பி.ஏ.,பி.எல்., முதன்மை மாவட்ட நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | கௌரிசங்கர் | ஜாதி |
| த/க. பெயர் | | மதம் |
| கிராமம் | | தொழில் |
| தாலுக்கா | | வயது |
| மாவட்டம் | | |

**PW**1 - **முதல் விசாரணை : (சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை செய்யப்படுகிறார்)**

வா.சா.1 ஆகிய நான் அசல் வழக்கின் வாதியான கனரா வங்கி கிளையின் தலைமை மேலாளர் ஆவேன். என் தரப்பு முதல் விசாரணை நிருபன ஆணையுறுதி வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். 26.10.2017 – ஒன்றாம் பிரதிவாதி வாதி வங்கியிடம் கிரெடிட் வசதி/கடன் கேட்டு கொடுத்த கடன் விண்ணப்பம் - அசல் **வா.சா.ஆ.**1 26.10.2017 – இரண்டாம் பிரதிவாதி வாதி வங்கிக்கு கொடுத்த சொத்து மற்றும் பொறுப்பு பட்டியல் (பிரதிவாதிகள் கையெழுத்திட்டது) - அசல் **வா.சா.ஆ.**2 இரண்டாம் பிரதிவாதியின் நிரந்தர வருமான வரி கணக்கு அட்டை - சுய சான்றிட்டது மற்றும் அப்போதைய கிளை மேலாளரால் அசல் சரி பார்க்கப்பட்டு சீல் மற்றும் சுருக்கு கையொப்பம் இடப்பட்டது. **வா.சா.ஆ.**3 26.10.2017 – மூன்றாம் பிரதிவாதி வாதி வங்கிக்கு கொடுத்த சொத்து மற்றும் பொறுப்பு பட்டியல் (பிரதிவாதிகள் கையெழுத்திட்டது) - அசல் **வா.சா.ஆ.**4 மூன்றாம் பிரதிவாதியின் நிரந்தர வருமான வரி கணக்கு அட்டை - சுய சான்றிட்டது மற்றும் அப்போதைய கிளை மேலாளரால் அசல் சரி பார்க்கப்பட்டு சீல் மற்றும் சுருக்கு கையொப்பம் இடப்பட்டது. **வா.சா.ஆ.**5 ஒன்றாம் பிரதிவாதியின் நிரந்தர வருமான வரி கணக்கு அட்டை - சுய சான்றிட்டது **வா.சா.ஆ.**6 03.07.2000 – ஒன்றாம் பிரதிவாதியின் கூட்டாண்மை நிறுவன சான்றிதழ் - சுய சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.**7

01.01.2011 – இரண்டாம், மூன்றாம் பிரதிவாதிகள் சேர்ந்து, ஒன்றாம் பிரதிவாதி நிறுவனம் சம்பந்தமாக உருவாக்கிய கூட்டாண்மை ஒப்பந்தம் - சுய சான்றிட்டது **வா.சா.ஆ.8** 25.02.2016 – ஈரோடு மாநகராட்சி ஒன்றாம் பிரதிவாதிக்கு கொடுத்த வேலை உத்திரவு (ஒர்க் ஆர்டர்) - சுய சான்றிட்டது **வா.சா.ஆ.9** 31.05.2017 – ஈரோடு மாநகராட்சி ஒன்றாம் பிரதிவாதிக்கு கொடுத்த வேலை உத்திரவு (ஒர்க் ஆர்டர்) - சுய சான்றிட்டது **வா.சா.ஆ.10** 12.06.2017 – ஈரோடு மாநகராட்சி ஒன்றாம் பிரதிவாதிக்கு கொடுத்த வேலை உத்திரவு (ஒர்க் ஆர்டர் - இரண்டு எண்ணிக்கை) - சுய சான்றிட்டது **வா.சா.ஆ.11** 26.06.2017 – ஒன்றாம் பிரதிவாதி சரக்கு மற்றும் சேவை வரி (GST)யின் கீழ் செய்த பதிவுச்சான்று - சுய சான்றிட்டது **வா.சா.ஆ.12** 27.08.2015 – ஒன்றாம் பிரதிவாதியின் 2014-15 ஆண்டிற்கான வருமான வரி கணக்கு தாக்கல் செய்த படிவம் - சுய சான்றிட்டது **வா.சா.ஆ.13** 31.10.2015 – ஒன்றாம் பிரதிவாதியின் 2015-16 ஆண்டிற்கான வருமான வரி கணக்கு தாக்கல் செய்த படிவம் - சுய சான்றிட்டது **வா.சா.ஆ.14** 14.07.2017 – ஒன்றாம் பிரதிவாதியின் 2016-17 ஆண்டிற்கான வருமான வரி கணக்கு தாக்கல் செய்த வடிவம் - சுய சான்றிட்டது **வா.சா.ஆ.15** 01.11.2017 – வாதி வங்கி, ஒன்றாம் பிரதிவாதிக்கு கொடுத்த ரூ.40,00,000/-த்திற்கான கடன் அனுமதி (ஒன்றாம் பிரதிவாதியின் கையொப்பத்துடன்) - அசல் **வா.சா.ஆ.16** 01.11.2017 – ஒன்றாம் பிரதிவாதி, வாதி வங்கியிடம் ஓவர்டிராப்ட் / கேஷ் கிரெடிட்/கடன் கணக்கு துவக்க கொடுத்த கடிதம் - அசல் **வா.சா.ஆ.17** 01.11.2017 – ஒன்றாம் பிரதிவாதி வாதி வங்கிக்கு எழுதிக் கொடுத்த ஈட்டுறுதி ஒப்பந்தம் - அசல் **வா.சா.ஆ.18** 01.11.2017 – இரண்டாம் பிரதிவாதி, வாதி வங்கிக்கு எழுதிக் கொடுத்த ஜாமீன்தாரர் ஒப்பந்தம் - அசல் **வா.சா.ஆ.19** 01.11.2017 - மூன்றாம் பிரதிவாதி, வாதி வங்கிக்கு எழுதிக் கொடுத்த ஜாமீன்தாரர் ஒப்பந்தம் - அசல் **வா.சா.ஆ.20** 01.11.2017 – ஒன்றாம் பிரதிவாதி, வாதி வங்கிக்கு கொடுத்த கடிதம், உறுதிமொழி மற்றும் உறுதிமொழிக் கடிதம் (மூன்று எண்ணிக்கை) - அசல் **வா.சா.ஆ.21** 01.11.2018 – ஒன்றாம் பிரதிவாதி, வாதி வங்கிக்கு கொடுத்த கடிதம் - அசல் **வா.சா.ஆ.22** 04.03.2020 – சிண்டிகேட் வங்கியை, 01.04.2020 முதல் கனரா வங்கியுடன் இணைத்தற்கான ஜி.எஸ்.ஆர்.155(E) கெஜட் - உண்மை நகல் **வா.சா.ஆ.23** 01.11.2017 முதல் 30.06.2020 வரை உள்ள காலத்திற்கு, ஒன்றாம்

பிரதிவாதியின் கடன் கணக்கு எண்.61251400001241 வாதி வங்கியில் கணினியில் பராமரிக்கப்பட்டதில், கடன் நிலுவை ரூ.18,50,900.68 பை என காட்டும் கடன் கணக்கு பேரேடு - உண்மை நகல் **வா.சா.ஆ.24** (வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.24 வரையிலான ஆவணங்கள் பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனையின் பேரில் குறியீடு செய்யப்படுகிறது) இந்த ஆவணங்களை குறியீடு செய்து கொண்டு பிராதுபடி தீர்ப்பு செய்ய பிரார்த்திக்கின்றேன்.

**PW**1: **பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை** : (பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)